Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 78 | உள்ளூர் - 19.03.2026 | வியாழன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 78 | வெளியூர் - 20.03.2026 | வெள்ளி | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**ஸ்த்ரா சீமா பால் 827 காலியிடங்கள்!**

**‘குபேரன்’ ஆசி பெற்ற மாதங்கள்?**

**அனல் பறக்கும் தேர்தல் கள செய்திகள்!**

**விஜய்க்கு தொடரும் சிக்கல்கள்?**

## ஈரான் மீது இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் சிதைந்துவிட்டது - சவுதி இளவரசர்!



துபாய், மார்ச். 19–

ஈரான் மீது கடந்த மாதம் 28–ந்தேதி போரை தொடங்கிய அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ராணுவம், அந்த நாட்டின் உச்சபட்ச தலைவர் அயதுல்லா அலி காமேனியை படுகொலை செய்தது.

அதைத்தொடர்ந்து வளைகுடா பிராந்தியம் முழுவதும் மூண் டுள்ள போரில் ஈரானில் 1,400–க்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டு உள்ளனர். இதில் அரசு மற்றும் ராணுவத்தின் முக்கிய தலைவர்களும் உயிரிழந்து உள்ளனர்.

இதில் மற்றுமொரு இழப்பாக அந்த நாட்டின் உச்சபட்ச தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் அலி லாரிஜானி நேற்று முன்தினம் நடந்த தாக்குதலில் பலியானார்.

இதற்கிடையே, லாரிஜானி மற்றும் சுலைமானி கொலைக்கு பழிவாங்கும் நோக்கில் அரபு நாடுகள் மீதும் ஈரான் நேற்று தாக்கு தலை தீவிரப்படுத்தியது.

அந்தவகையில் சவுதி அரேபியாவின் எண்ணெய் வயல்கள் நிறைந்துள்ள கிழக்கு மாகாணத்தில் அடுத்தடுத்து டிரோன்களை வீசி அதிரடித்தது. மேலும் ஏவுகணைகளையும் சரமாரியாக வீசியது.

இதில் இளவரசர் சுல்தான் விமானப்படை தளம் நோக்கி வந்த ஏவுகணை ஒன்றை சவுதி அரேபியா படைகள் தாக்கி அழித்தன. இதைப்போல ரியாத்தில் அமெரிக்கா மற்றும் பிற நாடுகளின் தூதரகங்கள் அமைந்துள்ள கட்டிடத்தை நோக்கி வந்த 2 டிரோன்களும் சுட்டு வீழ்த்தப்பட்டன.

குவைத், பஹ்ரைன், கத்தார் போன்ற வளைகுடா நாடுகளும் நேற்று ஈரானின் தாக்குதலுக்கு ஆளாகின. ஈராக்கில் உள்ள அமெரிக்க தூதரகம் தொடர்ந்து 2–வது நாளாக நேற்றும் தாக்குதலுக்கு ஆளானது. எனினும் இதில் யாரும் காயம் அடைந்ததாக தகவல் இல்லை. இந்தநிலையில், சவுதி எண்ணெய் வளங்கள் மீதும், சவுதி, அமீரகத்தில் பொதுமக்கள் மீதும் சர்வதேச சட்டங்களை மீறி ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தி உள்ளது. எங்கள் பொறுமை எல்லையற்றது அல்ல. ஈரான் மீது இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் சிதைந்துவிட்டது. ஈரானின் மிரட்டல் முயற்சியை கண்டு நாங்கள் அச்சப்படவில்லை. ராணுவ ரீதியாக பதிலடி கொடுக்கும் உரிமை சவுதிக்கு உள்ளது என ஈரானுக்கு சவுதி இளவரசர் பைசல் பின் பர்ஹான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## துரந்தர் - 2 படத்தில் பிரதமரின் காட்சிகள்!



புதுடெல்லி, மார்ச். 19–

துரந்தர் – 2 திரைப்படத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் காட்சிகள் இடம்பெற்றிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆதித்ய தர் இயக்கத்தில் ரன்வீர் சிங் நடிப்பில் கடந்தாண்டு இறுதியில் வெளியான துரந்தர் – 1 திரைப்படம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. ரூ. 1,000 கோடிக்கு மேல் வசூலித்து சாதனை படைத்தது.

மிகப்பெரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் உலகம் முழுவதும் இரண்டாம் பாகமான துரந்தர் தி ரிவென்ச் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் காட்சிகளும், பணமதிப்பிழப்பு அறிவிக்கும் காட்சிகளும் இரண்டாம் பாகத்தில் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதல் பாகத்தில் பாகிஸ்தானுக்கு உளவாளியாக செல்லும் ரன்வீர் சிங், அங்கிருந்து இந்தியாவுக்கு பயங்கரவாதிகள் ஊடுருவுவது, ஆயுதங்கள் கடத்துவது, கள்ள நோட்டுகளைப் புழக்கத்தில் விடுவது போன்ற தகவல்களை சேகரிக்கும் வகையில் காட்சிகள் இடம்பெற்றிருந்தன. இரண்டாம் பாகத்தில் இந்தியாவுக்கு தீங்கு விளைவிக்கும் பயங்கரவாதிகளை ரன்வீர் சிங் பழிவாங்கும் வகையில் கதை அம்சம் வடிவமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஜவுளி ஏற்றுமதி: குஜராத்தையும், மராட்டியத்தையும் பின்னுக்குத் தள்ளித் தமிழ்நாடு முதலிடம் - மு.க.ஸ்டாலின்!



சென்னை, மார்ச். 19–

மத்திய அரசின் ஏற்றுமதி–இறக்குமதி விவரங்கள் குறித்து ஆண்டுவாரி வர்த்தக பகுப்பாய்வுக்கான தேசிய ஏற்றுமதி–இறக்குமதிகளை பதிவு செய்திடும் நிர்யாத் நிறுவனம் ஆண்டுதோறும் ஆய்வறிக்கை வெளியிட்டு வருகிறது. இந்த நிர்யாத் நிறுவனம் 2024–25–ம் ஆண்டுக்கான ஜவுளி ஏற்றுமதிகள் குறித்த அறிக்கையை தற்போது வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி, இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள ஜவுளி துணிகளின் மதிப்பு 36,610 மில்லியன் டாலர் (சுமார் ரூ.3 லட்சத்து 40 ஆயிரம் கோடி). இதில் தமிழ்நாடு மட்டும் 7,997.17 மில்லியன் டாலர் (ரூ.73 ஆயிரத்து 925 கோடி) மதிப்புடைய ஜவுளித் துணிகளை ஏற்றுமதி செய்து, ஜவுளி ஏற்றுமதியில் இந்தியாவில் முதலிடம் பிடித்துள்ளது.

தமிழ்நாட்டினை அடுத்து, தொழில் வளர்ச்சியில் எப்போதும் முன்னணியில் நிற்கும் மாநிலங்களான குஜராத் 2–ம் இடமும், மராட்டியம் 3–ம் இடமும் பெற்றுள்ளன. இந்தநிலையில் திராவிட மாடல் அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் தமிழ்நாட்டின் ஏற்றுமதி அளவு நான்காண்டுகளில் 7,997.17 மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது என்று முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:–

ஜவுளி ஏற்றுமதி: திராவிட மாடலின் 4 ஆண்டுகளில் 29 சதவீதம் வளர்ச்சி! குஜராத்தையும், மராட்டியத்தையும் பின்னுக்குத் தள்ளித் தமிழ்நாடு முதலிடம்!

2020–2021–ல் 6,193.39 மில்லியன் டாலராக இருந்த தமிழ்நாட்டின் ஏற்றுமதி அளவு, திராவிட மாடல் அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் அடுத்த நான்காண்டுகளில் 7,997.17 மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் தமிழ்நாடு மட்டுமே 21.84 சதவீதம்! இவை அனைத்தையும் சொல்வது நாமல்ல, மத்திய அரசு! சாதனைகளைச் சொல்லி வெல்வோம் ஒன்றாக! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## ‘புதிய எழுச்சிக்கு உகாதி வழிவகுக்கட்டும்.. திராவிட மாடல் 2.0 அமையட்டும்’ - மு.க.ஸ்டாலின்



சென்னை, மார்ச். 19–

உகாதி திருநாளை முன்னிட்டு அரசியல் தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், உகாதியை முன்னிட்டு முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

”தெலுங்கு, கன்னட மொழி பேசும் எனதருமைத் திராவிட உடன்பிறப்புகள் அனைவருக்கும் உளம்நிறைந்த உகாதி நல்வாழ்த்துகள்! மொழித்திணிப்பு, பண்பாட்டுப் படையெடுப்பு, நிதி ஒதுக்கீட்டில் பாகுபாடு, தொகுதி மறுவரையறை பாதிப்பு என ஒன்றிய பா.ஜ.க. அரசு நம் மேல் தொடுத்திடும் தாக்குதல்களை எல்லாம் நம் ஒற்றுமையால் #வெல்வோம்_ஒன்றாக! இந்த உகாதி புதிய எழுச்சிக்கு வழிவகுக்கட்டும்! திராவிட மாடல் 2.0 அமையட்டும்!”

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்கா / இஸ்ரேல் - ஈரான் - உச்சகட்ட போர்

# இஸ்ரேலுக்கு பதிலடி

# கத்தார் எரிவாயு வயலை தாக்கிய ஈரான்

## ட்ரம்ப் வார்னிங்..!



அமெரிக்கா, மார்ச். 19–

மத்திய கிழக்கில், அமெரிக்கா–இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கு இடையே போர் உச்ச கட்டத்தை எட்டி வருகிறது. ஈரானின் சவுத் பார்ஸ் எண்ணெய் வயல் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்திய நிலையில், அதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, கத்தாரில் உள்ள திரவ இயற்கை எரிவாயு ஆலையின் மீது தாக்குதல் நடத்தியது ஈரான். இந்த நிலையில், இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர், உச்ச கட்ட எச்சரிக்கையை விடுத்துள்ளார். அவரது பதிவில் அவர் என்ன கூறியுள்ளார் என்பதை இப்போது பார்க்கலாம்.

**“ஈரானின் எதிர்காலம் பாதிக்கும் அளவிற்கு தாக்குவோம்“**

இது குறித்து ட்ரம்ப் தனது ட்ரூத் சோசியல் பக்கத்தில் போட்டுள்ள பதிவில், ‘‘மத்திய கிழக்கில் நடந்த நிகழ்வுகளால் ஏற்பட்ட கோபத்தில், இஸ்ரேல் ஈரானில் உள்ள சவுத் பார்ஸ் எரிவாயு வயல் எனப்படும் ஒரு முக்கிய ஆலையை வன்முறையாகத் தாக்கியுள்ளது. அந்த ஆலையின் ஒரு சிறிய பகுதி மட்டுமே தாக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் பற்றி அமெரிக்காவிற்கு எதுவும் தெரியாது. மேலும், கத்தார் நாடு இதில் எந்த வகையிலும் சம்பந்தப்படவில்லை. இது நடக்கப்போகிறது என்பது பற்றியும் அதற்கு எந்த தகவலும் தெரியாது. துரதிர்ஷ்டவசமாக, ஈரானுக்கு இதைப் பற்றியோ அல்லது சவுத் பார்ஸ் தாக்குதல் தொடர்பான வேறு எந்த முக்கிய உண்மைகளோ தெரியாது‘‘ என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ‘‘அதனால், அது(ஈரான்) கத்தாரின் திரவ இயற்கை எரிவாயு ஆலையின் ஒரு பகுதியை நியாயமற்ற முறையிலும், நேர்மையற்ற விதத்திலும் தாக்கியுள்ளது. ஈரான் அறிவீனமாக ஒரு அப்பாவி நாட்டை, இந்த விஷயத்தில் கத்தாரை தாக்க முடிவு செய்தால் தவிர, இந்த மிகவும் முக்கியமான மற்றும் மதிப்புமிக்க சவுத் பார்ஸ் வயல் தொடர்பாக இஸ்ரேல் இனி எந்த தாக்குதலையும் நடத்தாது. அப்படி நடந்தால், அமெரிக்கா, இஸ்ரேலின் உதவியுடனோ அல்லது சம்மதத்துடனோ அல்லது அது இல்லாமலோ, ஈரான் இதுவரை கண்டிராத அல்லது பார்த்திராத ஒரு பெரும் சக்தியுடனும் ஆற்றலுடனும் சவுத் பார்ஸ் எரிவாயு வயல் முழுவதையும் தகர்த்துவிடும்.‘‘ என்று ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

அதோடு, ‘‘ஈரானின் எதிர்காலத்தில் அது ஏற்படுத்தக்கூடிய நீண்டகால பாதிப்புகள் காரணமாக, இந்த அளவிலான வன்முறைக்கும் அழிவுக்கும் நான் அங்கீகாரம் அளிக்க விரும்பவில்லை. ஆனால், கத்தாரின் LNG மீண்டும் தாக்கப்பட்டால், அவ்வாறு செய்ய நான் தயங்க மாட்டேன்.‘‘ என்றும் கடுமையான எச்சரிக்கையை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விடுத்துள்ளார்.

**ஈரான் அதிபரின் எச்சரிக்கை**

இதனிடையே, தனது பிரம்மாண்டமான சவுத் பார்ஸ் இயற்கை எரிவாயு வயல் மீதான இந்தத் தாக்குதலை ஈரான் கண்டித்ததுடன், ‘‘முழு உலகையும் மூழ்கடிக்கக்கூடிய, கட்டுப்படுத்த முடியாத விளைவுகள்’’ ஏற்படும் என ஈரான் அதிபர் மசூத் பெஷெஷ்கியன் எச்சரித்துள்ளார்.

மேலும், சவுத் பார்ஸ் தாக்கப்பட்டதற்கு பதிலடியாக, ஈரான் தனது அண்டை நாடுகளின் எரிசக்தி வசதிகள் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்தியது. அதன் ஒரு பகுதியாக, கத்தாரில் உள்ள எரிவாயு வசதிகளும் தாக்கப்பட்டன. இதற்கு பதிலளிக்கும் விதமாக, ஈரான் தூதரக அதிகாரிகளை 24 மணி நேரத்திற்குள் நாட்டை விட்டு வெளியேற கத்தார் உத்தரவிட்டது.

இதனால், தற்போது மத்திய கிழக்கு போர் மிகவும் தீவிரமான கட்டத்தை எட்டியுள்ளது. ஈரான் உட்பட, வளைகுடா மொத்தத்திலும் உள்ள எண்ணெய் வளம் அழிக்கப்பட்டால், அது உலகிற்கே பெரும் இழப்பாக மாறிவிடும். இதனால், இந்த போர் உடனடியாக முடிவுக்கு வர வேண்டும் என்பதே அனைவரின் எண்ணமாக உள்ளது.

## தேர்தல் அன்று சம்பளத்துடன் கூடிய விடுமுறை! தேர்தல் ஆணையம் அறிவிப்பு!!




சென்னை, மார்ச். 19–

தேர்தல் அன்று சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

தமிழக சட்டமன்ற தேர்தல் அன்று அரசு மற்றும் தனியார் நிறுவன ஊழியர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும். விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க தொழிலாளர் நலத் துறைக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.




## பள்ளிக் கல்வித்துறையில் 7,499 தற்காலிக பணியிடங்கள் நிரந்தரம்: அரசாணை வெளியீடு!

சென்னை, மார்ச். 19–

தமிழக பள்ளிக் கல்வியில் தொடர் நீட்டிப்பு பெற்று வந்த ஆசிரியர், ஆசிரியரல்லாத 7,499 தற்காலிக பணியிடங்கள் நிரந்தரப் பணியிடங்களாக அறிவிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தலையங்கம் மதுரை மணி
வியாழக்கிழமை 19.03.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 05-ம் தேதி

## டிரம்ப்-ன் ராஜதந்திரம்.. இது நம்ம லிஸ்ட்லயே இல்லையே..!!



மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் காரணமாக சர்வதேச கச்சா எண்ணெய் சந்தையில் பெரும் பதற்றம் நிலவுகிறது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து ஈரானுக்கு எதிரான தாக்குதல்களை நடத்தியதால், கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு சப்ளை வளைகுடா நாடுகளில் இருந்து வெளியேற முடியாமல் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த சில வாரங்களில் மட்டும் சர்வதேச கச்சா எண்ணெய் விலை சுமார் 40 சதவீதம் அதிகரித்துள்ளது. இதனால் உலக நாடுகளில் எரிபொருள் விலை உயர்வு, பொருளாதார பாதிப்பு போன்ற பிரச்சினைகள் எழுந்துள்ளன. ஹார்முஸ் ஜலசந்தி போக்குவரத்து பாதை ஈரான் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளதால், கச்சா எண்ணெய் விநியோகம் குறைந்துள்ளது.

இந்த நிலையில் அமெரிக்கா யாரும் எதிர்பார்க்காத ஒரு நடவடிக்கையை எடுத்துள்ளது. அமெரிக்க ட்ரெஷரி துறை (Treasury Department) வியாழக்கிழமை ஒரு தற்காலிக உத்தரவை வெளியிட்டுள்ளது. இந்த ஒரு உத்தரவால் கச்சா எண்ணெய் விலை குறைவது மட்டும் அல்லாமல் டிரம்ப் மனநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் உலக நாடுகளுக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்கா இன்று வெளியிட்டுள்ள புதிய அறிவிப்பின் படி, ரஷ்யாவின் கச்சா எண்ணெய்யை உலக நாடுகளில் விற்பனை செய்ய ஈரான் ராணுவத்துடன் தொடர்புடைய கப்பல்கள் மற்றும் நிறுவனங்களை அனுமதி அளிக்க உள்ளதாக அறிவித்துள்ளது. ஈரான் தொடர்பான கப்பல்கள் சர்வதேச கடலில் இயங்க கூடாது என அமெரிக்கா ஏற்கனவே தடை விதித்திருக்கும் நிலையில் இப்புதிய தளர்வு ரஷ்யாவுக்கும் ஈரானுக்கும் குட்நியூஸாக அமைந்துள்ளது. ஈரான் ராணுவம் மற்றும் ஈரான் நிறுவனங்களுடன் தொடர்புடைய இந்த கப்பல்கள் 'கோஸ்ட் ஃபிளீட்' (ghost fleet) என்று அழைக்கப்படும் ரகசிய கப்பலாகும். இந்த கப்பல்கள் ஏற்கனவே மறைமுகமாக ரஷ்யா, வெனிசுலா போன்ற நாடுகளின் கச்சா எண்ணெய் மற்றும் பொருட்களை சட்டவிரோதமாக கொண்டு செல்கிறது.

இந்த நிலையில் உக்ரைன் மீதான ரஷ்ய போருக்கு பிறகு விதிக்கப்பட்ட தடைகளை தற்காலிகமாக தளர்த்தி, ஈரான் கப்பல்கள் மூலம் ரஷ்ய எண்ணெயை திறந்த சந்தையில் விற்க அமெரிக்கா அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கமே சர்வதேச கச்சா எண்ணெய் விலையை குறைப்பதுதான். உலக நாடுகள் தங்கள் முக்கிய சேமிப்பில் இருக்கும் எண்ணெயை பயன்பாட்டுக்கு கொண்டு வந்தும் விலை குறைக்க முடியாத காரணத்தால் ஈரான் கப்பல் மற்றும் ரஷ்ய கச்சா எண்ணெய் மீதான தடைகளை தளர்வுகள் அறிவித்துள்ளது டிரம்ப் அரசு. அமெரிக்க ஏற்கனவே ரஷ்ய கச்சா எண்ணெய் ஏற்றுமதியை ஏப்ரல் 11 வரை தடையின்றி விற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது குறுகிய கால தளர்வு என அமெரிக்க ட்ரெஷரி செயலர் ஸ்காட் பெசென்ட் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்–2026 முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே திருப்பூர் மாநகராட்சி, அம்மாபாளையம் நகராட்சிநடுநிலைப்பள்ளியில் அமைக்கப்படவுள்ள வாக்குசாவடி மையத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் கல்பனா உள்ளார்.



100 சதவீதம் வாக்குபதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு நடைபயண பேரணி தேனி மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜித்சிங் கொடியசைத்து தொடங்கி வைத்தார். மேலும் ஆட்சியர் ரஞ்ஜித்சிங் வாக்களிப்பதின் அவசியம் குறித்த கை பிரதிகளை பொதுமக்களுக்கு வழங்கினார். இந்த பேரணியில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜகுமார், மகளிர் திட்ட இயக்குனர் சந்திரா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் எடிசன், வட்டாச்சியர் சதீஸ்குமார், மகளிர் சுயஉதவிகுழு பெண்கள், பெண்கள்கல்லூரி, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

## அரசு ஊழியர்களுக்கு 3-வது குழந்தைக்கும் மகப்பேறு விடுப்பு: தமிழக அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, மார்ச். 19–

அரசு ஊழியர்களுக்கு 3வது குழந்தை பிறப்புக்கு 12 வாரங்கள் மகப்பேறு விடுப்பு அனுமதித்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு விடுப்பு விதிகளில் தமிழக அரசு சில திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. அதன்படி, 2 குழந்தைகள் என்ற வரம்பை தளர்த்தி, 3வது குழந்தைக்கும் மகப்பேறு விடுப்பு வழங்க முடிவு செய்யப்பட்டு தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. முன்னதாக, 2 குழந்தைகளுக்கு மட்டுமே மகப்பேறு விடுப்பு வழங்கப்படும் என விதிமுறைகள் இருந்தன. இதனை தொடர்ந்து பல அரசு ஊழியர்கள் இந்த விதிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்தனர்.




இந்த வழக்குகளில், உச்ச நீதிமன்றத்தின் கருத்துகளை அடிப்படையாக கொண்டு, 3வது குழந்தைக்கும் மகப்பேறு விடுப்பு வழங்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், குழந்தைகளின் எண்ணிக்கைக்கு எந்த உச்சவரம்பும் இல்லை எனவும், மகப்பேறு நலன்களை முழுமையாக மறுப்பது சட்டத்திற்கு முரணானது என தெரிவித்திருந்தது. அதே நேரத்தில், 2 குழந்தைகளுக்கு குறைவாக உள்ள பெண்களுக்கு 26 வாரங்கள் வரையும் மற்றும் 2 அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் உள்ள பெண்களுக்கு 12 வாரங்கள் வரையும் மகப்பேறு விடுப்பு வழங்கலாம் எனவும் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த தீர்ப்பின் அடிப்படையில், தமிழக அரசு அடிப்படை விதிகளில் சில திருத்தம் செய்து புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதன்படி, 2 குழந்தைகளுக்கு குறைவாக உள்ள பெண்களுக்கு அதிகபட்சமாக 365 நாட்கள் மகப்பேறு விடுப்பு வழங்கப்படும். மேலும், முதல் பிரசவத்தில் இரட்டை குழந்தைகள் பிறந்திருந்தால், அடுத்த பிரசவத்திற்கும் 365 நாட்கள் விடுப்பு வழங்கப்படும். இதேபோல், 2 அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் உள்ள பெண்களுக்கு முழு ஊதியத்துடன் அதிகபட்சம் 12 வாரங்கள் மகப்பேறு விடுப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடுப்பை பிரசவத்திற்கு முன் மற்றும் பிந்தைய காலத்தில் பயன்படுத்திக் கொள்ளலாம் என தமிழக அரசு வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

## கோடை விடுமுறைக்கு 50 சிறப்பு ரயில்கள்: தெற்கு ரயில்வே முடிவு!

சென்னை, மார்ச். 19–

கோடை விடுமுறையை ஒட்டி, 50 சிறப்பு ரயில்கள் இயக்க, தெற்கு ரயில்வே திட்டமிட்டு உள்ளது.

நடப்பு கல்வியாண்டில், பள்ளி, கல்லூரி இறுதி தேர்வுகள், ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் முடிவடைய உள்ளன. பின், கோடை விடுமுறை அறிவிக்கப்பட உள்ளது. சென்னை, கோவை போன்ற பெரிய நகரங்களில் வசிப்போர், சொந்த ஊர்களுக்கும், ஒரு சிலர் சுற்றுலா இடங்களுக்கும் செல்வர். வழக்கமாக செல்லும் விரைவு ரயில்களில், டிக்கெட் முன்பதிவு முடிந்து விட்டது.

இதற்கிடையில், தமிழக சட்டசபை தேர்தல், ஏப்ரல் 23ல் நடக்க உள்ளது. இதனால், கூடுதல் ரயில்களை இயக்க, தெற்கு ரயில்வே முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து, தெற்கு ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது:

கோடை விடுமுறைக்கான டிக்கெட் முன்பதிவு முடிந்து விட்டது. 'வந்தே பாரத்' உட்பட சில ரயில்களில் மட்டும் கணிசமாக




டிக்கெட்டுகள் காலியாக உள்ளன. அதிகமாக காத்திருப்போர் பட்டியல் உள்ள ரயில்களின் வழித்தடத்தை தேர்வு செய்து, சிறப்பு ரயில்கள் இயக்கப்படும். வாய்ப்புள்ள விரைவு ரயில்களில், கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படும்.

பயணியர் தேவை கருதி, தென் மாவட்டங்கள், மேற்கு மாவட்டங்களுக்கும், கேரளாவுக்கும் செல்லும் முக்கிய வழித்தடங்களில் சிறப்பு ரயில்கள் இயக்க உள்ளோம். இரண்டு மாதங்களுக்கு, 50 சிறப்பு ரயில்கள், 200 'ட்ரிப்'களாக இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## தெலுங்கு வருட பிறப்பை முன்னிட்டு திருப்பதி ஏழுமலையானிடம் ஆண்டு வரவு, செலவு கணக்கு ஒப்படைப்பு!



திருமலை, மார்ச். 19–

தெலுங்கு வருட பிறப்பை முன்னிட்டு திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று ஆழ்வார் திருமஞ்சனம் நடந்தது. தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பி.ஆர்.நாயுடு மற்றும் கோவில் ஊழியர்கள் வளாகம் முழுவதும் தூய்மைப்படுத்தி பல்வேறு வாசனை திரவியங்களை தெளித்தனர். கோவில் வளாகம் மற்றும் வெளிப்புறங்களில் பல்வேறு வகையான மலர்கள் மற்றும் வண்ண மின்விளக்குகள் அலங்காரம் செய்யப்பட்டு இருந்தது. அதிகாலை 3 மணிக்கு சுப்ரபாத சேவையுடன் பூஜைகள் தொடங்கியது. காலை 8 மணிக்கு வேத பண்டிதர்கள் கடந்த ஆண்டு வரவு–செலவு கணக்குகளை ஏழுமலை யானிடம் சமர்ப்பிக்கும் ஐதீகம் நடந்தது. பின்னர் இந்த ஆண்டுக்கான புது பஞ்சாங்கம் வாசிக்கப்பட்டது. திருப்பதியில் நேற்று 72,332 பேர் தரிசனம் செய்தனர். 21,852 பேர் முடி காணிக்கை செலுத்தினர். ரூ.3.53 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது. நேரடி இலவச தரிசனத்தில் வந்த பக்தர்கள் 12 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்தனர்.

## வாகன ஓட்டிகளுக்கு ஷாக் நியூஸ்..! மத்திய அரசின் புதிய விதிகள்..!

புதுடெல்லி, மார்ச். 19–

தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்கக் கட்டணம் செலுத்தாமல் செல்பவர்கள் இனிமேல் இரட்டிப்புச் சுங்கக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியிருக்கும். 15 நாட்களுக்கு மேல் கட்டணம் செலுத்தத் தவறினால், அந்த வாகனத்தின் மீதும், அதன் போக்குவரத்தின் மீதும் பல்வேறு கட்டுப்பாடுகளும் தடைகளும் விதிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் இந்தப் புதிய விதிமுறைகளை வகுத்துள்ளதுடன், கட்டணம் செலுத்தத் தவறியவர்களுக்கு மின்னணு அறிவிப்புகளை (e–notices) அனுப்பவும் முடிவு செய்துள்ளது.

“செலுத்தப்படாத பயனர் கட்டணம்” என்பது, மின்னணுச் சுங்கக் கட்டண வசூல் (ETC) கட்டமைப்பின் மூலம் ஒரு வாகனத்தின் பயணம் பதிவு செய்யப்பட்டிருந்தும், அதற்கான பயனர் கட்டணம் பெறப்படாத நிலையைக் குறிப்பதாகும்.

தாமதமாகச் செலுத்தப்படும் கட்டணங்களுக்கு அதிக அபராதம் : அமைச்சகம். 'தேசிய நெடுஞ்சாலைகள் கட்டணம் (விகித நிர்ணயம் மற்றும் வசூல்) (இரண்டாவது திருத்தம்) விதிகள், 2026'–



இன் படி, மின்னணு அறிவிப்பு பெறப்பட்ட 72 மணி நேரத்திற்குள் அபராதம் செலுத்தப்பட்டால், அசல் சுங்கக் கட்டணத்தை மட்டும் செலுத்தினால் போதுமானது. இத்தகைய சூழலில், கூடுதல் கட்டணங்கள் எதுவும் வசூலிக்கப்படாது. இருப்பினும், கட்டணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டால், பயனர் அதிகப்படியான அபராதத்தைச் செலுத்த வேண்டியிருக்கும்.

சுங்கக் கட்டண வசூல் முறைகளில் செய்யப்பட்டுள்ள இம்மாற்றங்கள், செலுத்தப்படாத சுங்கக் கட்டணங்களை வசூலிப்பதற்கான வழிமுறைகளை மேலும் வலுப்படுத்துகின்றன. குறிப்பாக, சுங்கச் சாவடித் தடைகள் (barriers) இல்லாத நெடுஞ்சாலைகளில், சுங்கக் கட்டண வசூலை மின்னணு முறையில் அமல்படுத்துவதற்கும் இது வழிவகுக்கிறது.

## HDFC வங்கி தலைவர் திடீர் ராஜினாமா..!! வாடிக்கையாளர்கள், முதலீட்டாளர்களுக்கு சிக்கலா?




புதுடெல்லி, மார்ச். 19–

இந்தியாவின் முன்னணி தனியார் வங்கி சேவை நிறுவனமாக ஹெச்டிஎஃப்சி வங்கி செயல்பட்டு வருகிறது. இதன் தலைவராக இயங்கிவந்த அதானு சக்ரபர்த்தி திடீரென தன்னுடைய பதவியை ராஜினாமா செய்திருக்கிறார். இது வங்கி வாடிக்கையாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை அடுத்து ஹெச்டிஎஃப்சி வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் அதானு சக்ரபர்த்தியின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்து விட்டது என்றும் ரிசர்வ் வங்கி ஒப்புதலின்படி இன்று முதல் கேகி மிஸ்திரி இடைக்கால தலைவராக செயல்படுவார் என்றும் அறிவித்துள்ளது. அடுத்த மூன்று மாத காலத்திற்கு இவர் இந்த பொறுப்பை வகிப்பார் என கூறியிருக்கிறது.




பழனி பெரிய பள்ளிவாசலில் முஸ்லிம் தர்ம பரிபாலன சங்கம் சார்பில் இப்தார் விருந்து நடைபெற்றது. இதில் திமுக சட்டமன்ற உறுப்பினர் செந்தில் குமார், பழனி முன்னாள் சட்டமன்ற அதிமுக சார்பில் வேணுகோபால் மற்றும் மாநில எம்ஜிஆர் இளைஞர் அணி துனை செயலாளர் ரவிமனோகரன், நகர் மன்ற தலைவர் உமா மகேஸ்வரி, திமுக நகர செயலாளர் வேலுமணி, அதிமுக நகர செயலாளர், முருகானந்தம், தமிழக வெற்றிக்கழக பழனி பாலன் மற்றும் அனைத்து கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர் . மேலும் பழனி மாவட்ட வணிகர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## 'குபேரன்' ஆசி பெற்றதாக நம்பப்படும் மாதங்கள்!



மத நம்பிக்கைகள் படி குபேரன், செல்வத்தின் கடவுள் ஆவார். தேவர்களின் கருவூலத் தலைவராக குறிப்பிடப்படும் இவர், தனி நபரின் பொருளாதார நிலையை உயர்த்தும் சக்தியை கொண்டிருப்பதாகவும் நம்பப்படுகிறது. எண் கணிதத்தில், குபேரனுடன் தொடர்பு கொண்ட மாதங்கள் சில இருப்பதாகவும், குறிப்பிட்ட இந்த மாதங்களில் பிறந்தவர்கள் குபேரனின் ஆசியை பெற்றிருப்பதாகவும் நம்பப்படுகிறது. குபேரனின் அருள் பெற்ற இவர்களின் வாழ்க்கையில் பணப்புழக்கம் சீராக இருக்கும், விரைவில் செல்வந்தராக மாறும் வாய்ப்பினையும் வழங்கும் என கூறப்படுகிறது.

**ஜனவரி!**

ஆண்டின் முதல் மாதமான ஜனவரி மாதம், கடின உழைப்பு மற்றும் ஒழுக்கத்திற்கு அடையாளமாக இருக்கும் மாதம் ஆகும். குறித்த இந்த மாதத்தில் பிறந்த நபர்கள், தங்கள் கடின உழைப்பால் முன்னேற்றம் காணும் நபர்களாக கருதப்படுகின்றனர். சூரியனை ஆளும் அதிபதியாக கொண்ட எண் 1–ன் குணாதிசயங்களை பிரதிபலிக்கும் இந்த ஜனவரி மாதம், குபேரனின் ஆசியையும் கொண்டிருக்கிறது. அந்த வகையில் இந்த ஜனவரி மாதத்தில் பிறந்தவர்கள், தங்கள் கடின உழைப்புடன் குபேரனின் ஆசியை இணைத்து, வாழ்க்கையில் தொடர்ச்சியான வெற்றிகளை காணுகின்றனர்.

**மார்ச்!**

எண் கணித குறிப்புகள் படி மார்ச் மாதத்தில் பிறந்தவர்கள் படைப்பாற்றல் நிறைந்தவர்கள். தங்கள் தனித்திறமைகளை ஆக்கப்பூர்வமான வழிகளில் பயன்படுத்தி, தங்கள் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை தானே உருவாக்கும் வல்லமை பெற்றவர்கள். இவர்களின் குணத்திற்கு ஏற்ற வகையில் இவர்கள், கலைத்துறையில் சாதனைகள் பல செய்யும் வாய்ப்பு காணப்படுகிறது. இசை, நாடகம், நடிப்பு, தொழில்நுட்பம் சார்ந்த விஷயங்களிலும் சிறந்து விளங்குவர்கள். பொருளாதார ரீதியாக தங்களை வளர்த்துக் கொள்ள தங்கள் தனித்திறமைகளை பயன்படுத்துவார்கள்.

**மே!**

எண் கணிதத்தின் படி ஆண்டின் 5–வது மாதமான மே மாதம், ஆளுமை பண்புகளுடன் தொடர்பு கொண்ட ஒரு மாதம் ஆகும். தெளிவான திட்டங்கள், தீர்க்கமான செயல்பாடு என எடுக்கும் காரியத்தில் வெற்றியை தனதாக்கும் வல்லமை கொண்டவர்கள். குபேரனின் ஆசி பெற்ற இவர்கள், நிதி மேலாண்மையில் சிறந்து விளங்குவார்கள். முதலீடுகள் சார்ந்த விஷயங்களில் சிறப்பாக செயல்பட்டு, தங்கள் பொருளாதார நிலையை மேம்படுத்துவார்கள். நிறுவனத்தில் ஒருவரின் கீழ் பணியாற்றுவதை காட்டிலும், சுயமாக தொழில் செய்து தனது திறமைகளை வெளிப்படுத்துவார்கள்.

**ஆகஸ்ட்!**

ஆண்டின் 8–வது மாதமான ஆகஸ்ட் மாதம், தன்னம்பிக்கையின் அடையாளமாக பார்க்கப்படுகிறது. குறித்த இந்த மாதத்தில் பிறந்தவர்கள், ஆளுமை பண்பு கொண்டவர்களாகவும், தன்னம்பிக்கை நிறைந்தவர்களாகவும் இருப்பார்கள். குபேரனின் ஆசி இவர்களுக்கு துணை இருக்க, தொழில் வாழ்க்கையில் இவர்கள் எடுக்கும் முடிவுகள் எதிர்பார்த்த நற்பலன்களை அளிக்கும் – போதுமான வருமானத்தையும் கொண்டு வரும். அரசியல், தொழில்நுட்பம், நிதி மேலாண்மை போன்ற துறைகள் இவர்களுக்கு சாதகமான பலன்களை அளிக்கும் துறைகளாக பார்கப்படுகின்றன!

**நவம்பர்!**

நவம்பர் மாதம் பிறந்தவர்கள் அடிப்படையில் ஆளுமை பண்பு கொண்டவர்கள், ஆக்கப்பூர்வமான சிந்தனைகளுக்கு பெயர் பெற்றவர்கள். தங்கள் கடின உழைப்புடன், ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை இணைத்து எதிர்பார்த்த மாற்றங்களை தங்கள் தொழில் வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் கொண்டு வருவார்கள். குறிப்பாக, பங்குச்சந்தை முதலீடு, நிதி மேலாண்மை சார்ந்த துறைகளில் சாதனைகள் பல புரிவார்கள் என எண் கணித கணிப்புகள் கூறுகின்றன.

(பொறுப்பு துறப்பு: இங்கு வழங்கப்பட்ட தகவல்கள் எண் கணிதம் மற்றும் பொதுவான மத நம்பிக்கைகள் அடிப்படையில் தொகுக்கப்பட்டவை; அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டவை அல்ல).



பழனி முருகன் மலை கோவிலில் ரோப்கார் மாதாந்திர பராமரிப்பு பணிக்காக நிறுத்தப்படுவதாக கோவில் நிர்வாகம் கூறியுள்ளனர்.


## தொடர் சரிவில் தங்கம், வெள்ளி விலை!



சென்னை, மார்ச். 19–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.2,160 குறைந்து ரூ.1,14,400–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.270 குறைந்து ரூ.14,300–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போன்று வெள்ளி விலையும் இன்று அதிரடியாக குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.10 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.265–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.




## ரத்த அழுத்தம் & சர்க்கரை கட்டுப்பாட்டிற்கான '3 மணி நேர விதி'..!



இன்றைய வேகமான வாழ்க்கை முறையில், சரியான நேரத்தில் உணவருந்தாத காரணத்தினால் பல உடல்நலப் பிரச்சினைகள் உருவாகி வருகின்றன. குறிப்பாக, உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் ஆகியவை ஒவ்வொரு வீட்டிலும் சாதாரணமாகிவிட்டன. உலக சுகாதார நிறுவனத்தின் கூற்றுப்படி, உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் இப்பிரச்சினைகளால் அவதிப்பட்டு வருகின்றனர். இருப்பினும், நாம் உண்ணும் உணவை மாற்றாமலேயே, வெறும் 'உண்ணும் நேரத்தை' மாற்றுவதன் மூலம் இவ்விரண்டு நோய்களையும் கட்டுப்படுத்த முடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். வடமேற்குப் பல்கலைக்கழக (Northwestern University) ஆராய்ச்சியாளர்கள் நடத்திய சமீபத்திய ஆய்வில் வெளிவந்துள்ள சுவாரஸ்யமான உண்மைகளை இப்போது அறிந்துகொள்வோம்.

**ஆய்வில் வெளிவந்த உண்மைகள்**

வடமேற்குப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், 36 முதல் 75 வயதுக்குட்பட்ட மக்களிடம் இந்த ஆய்வை மேற்கொண்டனர். அவர்கள் உறங்கச் செல்வதற்கு மூன்று மணி நேரத்திற்கு முன்பாகவே தங்கள் இரவு உணவை முடித்துக்கொள்ளுமாறும், இரவில் 13 முதல் 16 மணி நேரம் வரை உணவு ஏதும் உட்கொள்ளாமல் (விரதம்) இருக்குமாறும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதன் விளைவாக, அவர்களிடத்தில் வியக்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன.

இரவில் உறங்கும் நேரத்தில், அவர்களின் இரத்த அழுத்தம் சுமார் 3.5% குறைந்தது. இதயத் துடிப்பு 5% வரை குறைந்ததுடன், இதயத்தின் செயல்பாடும் மேம்பட்டது. இரத்தச் சர்க்கரை அளவுகள் கட்டுப்பாட்டிற்குள் வந்தது மட்டுமல்லாமல், இன்சுலின் உணர்திறனும் (insulin sensitivity) அதிகரித்தது. இது நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் நன்மை பயப்பதாகும்.

**இம்முறையை எவ்வாறு பின்பற்றுவது?**

நீங்கள் இரவு 10 மணிக்கு உறங்க விரும்பினால், இரவு 7 மணிக்குள் உங்கள் உணவை முடித்துக்கொள்ளுங்கள். இரவு உணவிற்குப் பிறகு விளக்குகளின் ஒளியைக் குறைத்து வைப்பதும், அலைபேசிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதும் உங்கள் வளர்சிதை மாற்றத்தை (metabolism) மேம்படுத்தும். இரவில் பருப்பு வகைகள், பனீர், சாலட் அல்லது கிரில் செய்யப்பட்ட கோழி இறைச்சி போன்ற எளிதில் செரிக்கும் உணவுகளை உண்பது சிறந்தது. இரவில் நீண்ட நேரம் உணவு ஏதும் உட்கொள்ளாமல் இருப்பது, உடலில் 'கார்டிசோல்' (cortisol) எனும் ஹார்மோனின் அளவைக் குறைத்து, வளர்சிதை மாற்றத்தைச் சமநிலையில் வைத்திருக்க உதவுகிறது.

ஷிஃப்ட் முறையில் (மாற்றுப் பணி நேரங்களில்) பணிபுரிபவர்களுக்கு இது சற்று கடினமாகத் தோன்றினாலும், சாதாரண மக்கள் இந்தச் சிறிய பழக்க மாற்றத்தின் மூலம் இதய நோய் ஏற்படும் அபாயத்தைத் தவிர்க்க முடியும். வார இறுதி நாட்களிலும் இதே உறக்க அட்டவணையைப் பின்பற்றுவது இன்னும் சிறந்த பலன்களைத் தரும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

நாம் என்ன உண்கிறோம் என்பதை விட, 'எப்போது உண்கிறோம்' என்பதே நமது ஆரோக்கியத்தைத் தீர்மானிக்கிறது. உறங்கச் செல்வதற்கு மூன்று மணி நேரத்திற்கு முன்பாகவே உணவை முடித்துக்கொள்வது போன்ற ஒரு எளிய மாற்றத்தின் மூலம், உங்கள் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை அளவுகளை நீங்கள் இயற்கையாகவே கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும்.

## அறிவிப்பு

எமது கட்சிக்காரர் தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், மேல்மங்கலம் கிராமம், வடுகபட்டி முகவரியில் வசிக்கும் லேட்.ராசுத்தேவர் அவர்களின் குமாரர் R.பாஸ்கரன் என்பவரின் பெரியகுளம் சார்பதிவாளர் அலுவலகம் 1 புத்தகம் ஆவண எண்.2305/1951ம் நம்பர் ரிஜிஸ்டர் கிரைய அசல் ஆவணத்தை 01.02.2026ம் தேதியில் வீடு பராமரிப்பு பணி மேற்கொள்ளும் போதும், பொருட்களை மாற்றி வேறு வீட்டில் வைக்கும் போது தவறவிட்டுவிட்டார். கிடைக்கப் பெற்றவர்கள் உடனே கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும். முகவரி:– P.சதிஸ்குமார்.B.A.B.L. (வழக்கறிஞர்) 4, நகராட்சி வணிக வளாகம், தென்கரை, பெரியகுளம், மொபைல் எண் 9843175966 அறிவிப்பு எமது கட்சிக்காரர் தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், பெரியகுளம் டவுன், கீழவடகரை, வைத்தியநாதபுரம் முகவரியில் வசிக்கும் வடுகபட்டி பாண்டியன் என்ற பெருமாள் குமாரத்தியும் S.ராஜன் அவர்களின் மனைவியுமான R.சுமதி என்பவரின் பெரியகுளம் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் 1 புத்தகம் ஆவண எண் 1135/1996ம் நம்பர் ரிஜிஸ்டர் கிரைய அசல் ஆவணத்தை 07.02.2026ம் தேதியில் வீடு பராமரிப்பு பணி மேற்கொள்ளும் போதும், பொருட்களை மாற்றி வேறு வீட்டில் வைக்கும் போது தவறவிட்டுவிட்டார். கிடைக்கப் பெற்றவர்கள் உடனே கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி:–
**P.சதிஸ்குமார், B.A.B.L.**
(வழக்கறிஞர்)
4, நகராட்சி வணிக வளாகம்,
தென்கரை, பெரியகுளம்,
மொபைல் எண் 9843175966.

## ஒவ்வொரு துளி ரத்தத்திற்கும் அமெரிக்கா-இஸ்ரேல் விலை கொடுக்கும்.. லாரிஜானி படுக்கொலைக்கு பழி தீர்ப்போம் - ஈரான் உச்ச தலைவர்!

ஈரான், மார்ச். 19–

ஈரான் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அலி லாரிஜானியை கடந்த மார்ச் 17 அன்று இஸ்ரேலின் ஏவுகணை தாக்கு தலில் கொல்லப்பட்டார். பாதுகாப்புக்காக தனது இருப்பிடத்தை தொடர்ந்து மாற்றி வந்த அவர் அன்றைய தினம் தனது மகள் பாத்திமா லாரிஜானி வீட்டுக்கு ரகசியமாக சென்றதை இஸ்ரேல் உளவுத்துறையான மொஸாட் மோப்பம் பிடித்தது. அவர் மகளின் வீட்டுக்குள் நுழைந்ததும் அதன் மீது இஸ்ரேல் போர் விமானம் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் அவர், அவரது மகன் மோர்டெசா லாரிஜானி மற்றும் உதவியாளர் கொல்லப்பட்டனர்.



நாட்டின் உச்சத் தலைவருக்கு அடுத்தபடியாக மிகவும் சக்திவாய்ந்த தலைவரான லாரிஜானியின் மரணம் ஈரானை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

"லாரிஜானியும் அவரது ஆதரவாளர்களும் இப்போது நரகத்தில் இருக்கிறார்கள்'' என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் மார்தட்டினார். இந்நிலையில் லாரிஜானி மரணம் தொடர்வாக ஈரான் உச்ச தலைவர் மொஜ்தபா காமேனி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், ஒவ்வொரு துளி இரத்தத்திற்கும் ஒரு விலை உண்டு, அந்த விலையை அமெரிக்காவும் இஸ்ரேலும் கொடுத்தே தீர வேண்டும். நீதி உறுதி செய்யப்படும். லாரிஜானி ஒரு சிறந்த தலைவர், தொலைநோக்கு பார்வை கொண்டவர், புத்திசாலி. பல்வேறு துறைகளில் பலதரப்பட்ட அனுபவங்களைக் கொண்டவர் அவர்.

லாரிஜானி போன்ற ஒரு நபர் கொல்லப்பட்டது, அவர் எவ்வளவு முக்கியமானவர் என்பதையும், இஸ்லாத்தின் எதிரிகளுக்கு அவர் மீது எவ்வளவு ஆழமான வெறுப்பு இருந்தது என்பதையும் காட்டுகிறது.

இஸ்லாமிய அமைப்பின் மரத்தின் அடியில் சிந்தப்பட்ட இந்த இரத்தம் அதனை இன்னும் வலிமையாக்கும்.

நிச்சயமாக, ஒவ்வொரு சொட்டு இரத்தத்திற்கும் ஒரு விலை உண்டு, அந்த கொலைகாரர்கள் விரைவில் அதற்கான விலையை கொடுக்க வேண்டியிருக்கும்'' என்று தெரிவித்தார்.

## பான் கார்டுக்கு விண்ணப்பிக்க இனி ஆதார் மட்டும் போதாது - மத்திய அரசு அதிரடி!

புதுடெல்லி, மார்ச். 19–

பான் கார்டு வருமான வரித்துறையால் வழங்கப்படும் முக்கிய அடையாள ஆவணமாகும். நிதி பரிவர்த்தனைகள், வருமான வரி செலுத்துதல் உள்ளிட்டவற்றுக்கு பான் கார்டு கட்டாயமாகும். 10 இலக்கங்கள் கொண்ட இந்த பான் கார்டை வருமான வரித்துறையின் கீழ் செயல்படும் இணையதளத்தில் விண்ணப்பித்து பெற முடியும். தற்போது வரை ஆதார் கார்டு மட்டும் இருந்தால் போதும். அதை வைத்து உடனடியாக பான் எண் பெற்றுக்கொள்ள முடியும்.




ஆனால், இந்த விதிகளில் வரும் 1ஆம் தேதி முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இனி பான் கார்டு விண்ணப்பத்தின் போது பிறந்த தேதியை உறுதி செய்ய ஆவணமும் சமர்ப்பிக்க வேண்டும்.

இது தொடர்பாக மத்திய அரசின் பொது சேவை அமைப்பு கூறியிருப்பதாவது: "பான் கார்டுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை மேம்படுத்தப்பட்டுள்ளது. புதிய நடைமுறையின்படி ஆதார் அட்டையுடன் பிறந்த தேதியை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டியது அவசியம். மார்ச் 31ம் தேதிக்குள் விண்ணப்பிக்கும் நபர்களுக்கு ஆதார் மட்டுமே போதுமானது'' என தெரிவிக்கப்பட்டுள்ளது. பிறப்பு சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம், பத்தாம் வகுப்பு கல்வி சான்றிதழ் உள்ளிட்ட ஏதேனும் ஒன்றை பிறந்த தேதிக்கான ஆவணமாக சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய கல்விக் கொள்கையின்படி அறிமுகம்: சி.பி.எஸ்.இ. 10-ம் வகுப்பு 2-வது பொதுத் தேர்வுக்கு விண்ணப்பம் தொடக்கம்!

புதுடெல்லி, மார்ச். 19–

மத்திய அரசு புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தி உள்ளது. அதன்படி, இந்த ஆண்டு முதல், மத்திய இடைநிலைக் கல்வி வாரியமான சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில், 10–ம் வகுப்பு மாணவர்களுக்கு, 2 முறை வாரியத் தேர்வுகளை எழுத வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், இந்த ஆண்டு 2–வது பொதுத் தேர்வுகள் வரும் மே மாதம் நடைபெற உள்ளது. இதில், அதிகபட்சமாக 3 பாடங்களுக்கு தேர்வு எழுதி, தங்களின் மதிப்பெண்களை உயர்த்திக் கொள்ளலாம்.



அதற்கு, வரும் 31–ந் தேதி வரை கட்டணம் செலுத்தி, முதல் கட்டமாக விண்ணப்பிக்கலாம். அல்லது 10–ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியானதில் இருந்து, 5 நாட்களுக்குள் 2–ம் கட்டமாக விண்ணப்பிக்கலாம். அடுத்த 2 நாட்களுக்கு தாமதக் கட்டணம் செலுத்தி, 3–ம் கட்டமாகவும் விண்ணப்பிக்கலாம். அதே சமயம், முதல் கட்ட பொதுத் தேர்வில் பங்கேற்காத மாணவர்கள், 2–ம் கட்ட பொதுத் தேர்வில் பங்கேற்க அனுமதிக்க மாட்டார்கள் என்று சி.பி.எஸ்.இ. தெரிவித்துள்ளது.

## திருப்பரங்குன்றம் கோவில் பங்குனி திருவிழா கலைநிகழ்ச்சிகள் ரத்து!

திருப்பரங்குன்றம், மார்ச். 19–

திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி திருவிழா 15 நாட்கள் விமரிசையாக நடப்பது வழக்கம். இந்த திருவிழாவின் போது சன்னதிதெருவில் 16 கால் மண்டபம் வளாகத்தில் 15 நாட்களும் கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள், இன்னிசை நிகழ்ச்சிகள், பள்ளி மற்றும் கல் லூரி மாணவ, மாணவிகளின் ஒயிலாட்டம், மயிலாட்டம் உள்ளிட்ட பல்வேறு நடனங்கள், பக்தி சொற்பொழிவுகள் நடைபெறுவது வழக்கம்.



இந்த ஆண்டும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் பக்தி சொற்பொழிவுகள் நடத்திட உபயதாரர்கள் முன்வந்தனர். வழக்கம் போல உபயதாரர்கள் நடத்தக்கூடிய நிகழ்ச்சிகளுக்காக சிறப்பு அழைப்பிதழ் தயார்படுத்தும் பணியில் கோவில் நிர்வாகம் ஈடுபட்டு வந்தது. இந்த நிலையில் சட்டமன்ற தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட்டது. இதை முன்னிட்டு தேர்தல் நன்னடத்தை விதிக்கு உட்பட்டு பங்குனி திருவிழாக்கான கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள், பக்தி சொற்பொழிவுகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

அதேசமயம் வருகிற 23–ந்தேதி முதல் ஏப்ரல் 6–ந் தேதி வரை 15 நாட் களும் வழக்கம்போல பங்குனி திருவிழா விமரிசையாக நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளை கோவில் அறங்காவலர் குழுவினர் செய்து வருகின்றனர்.

## பெண் ஊழியர்கள் பிரசவ விடுப்பு விவகாரம் - தமிழக அரசின் விதிகளில் திருத்தம்!

சென்னை, மார்ச். 19–

அரசு பெண் ஊழியர்களுக்கு பிரசவ விடுப்பு வழங்குவது தொடர்பாக கடந்த ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு அளித்த உத்தரவின் அடிப்படையில் தமிழ்நாடு அரசின் அடிப்படை விதிகளில் மாற்றம் கொண்டு வந்து தமிழக அரசின் தலைமை செயலாளர் முருகானந்தம் உத்தரவு பிறப்பித்துள்ளார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:–

திருமணமான அரசு பெண் ஊழியர் ஒருவருக்கு 2 அல்லது அதற்கு குறைவான எண்ணிக்கையில் குழந்தைகள் இருக்கும்பட்சத்தில்




அவருக்கு பிரசவ விடுப்பாக 365 நாட்கள் வரை அளிக்கலாம். பெண் ஊழியர் ஒருவருக்கு முதல் பிரசவத்தில் இரட்டை குழந்தைகள் பிறந்திருந்தாலும் அவருக்கு அடுத்த பிரசவத்துக்கு 365 நாட்கள் வரை விடுப்பு அளிக்கலாம். ஏற்கனவே 2 அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் இருக்கும் பெண் ஊழியர் மீண்டும் பிரசவ விடுப்பு கேட்கும் பட்சத்தில் அவருக்கு சம்பளத்துடன் கூடிய 12 வாரங்கள் விடுப்பு அளிக்கலாம். இந்த விடுப்பை அவர் பிரசவத்துக்கு முன்போ அல்லது பின்போ எடுத்து கொள்ள அனுமதிக்கலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881


## வேலை வாய்ப்பு

### சசாஸ்த்ரா சீமா பால் 827 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: சஷஸ்த்ர சீமா பல்
அறிவிப்பு எண்: 524/RC/SSB/Combined Advt./CT to SI (Non GD)/ 2025
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 827 காவலர் (ஓட்டுநர், கால்நடை மருத்துவர், தோட்டக்காரர், தண்ணீர் கொண்டு செல்பவர், செருப்புத் தைப்பவர், தையல்காரர், சலவையாளர், முடி திருத்துபவர், உணவு பரிமாறுபவர், தச்சர், செவிலியர் உதவியாளர்) பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 21.03.2026
கடைசி தேதி: 20.04.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://ssb.gov.in/

## சினிமா துளிகள்..!

### 'ஜனநாயகன்' வெளியாவது எப்போது? தேர்தல் கமிஷன் கையில் முடிவு!




த.வெ.க., தலைவர் விஜய் நடித்துள்ள ஜன நாயகன் திரைப்படம், தேர்தல் கமிஷன் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

த.வெ.க., என்ற அரசியல் கட்சியை துவக்கியுள்ள விஜய், தன் கடைசி படம் என அறிவித்த ஜனநாயகன் , பொங்கல் பண்டிகைக்கு முன், கடந்த ஜன., 9ல் வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

படத்தில் மத உணர்வுகளை புண்படுத்தும் காட்சிகள் இருப்பதாக கூறி, மத்திய திரைப்பட சான்றிதழ் வாரியம், தணிக்கை சான்றிதழ் அளிக்க மறுத்தது. இதனால் திட்டமிட்டபடி, பொங்கல் பண்டிகையின்போது ஜனநாயகன் வெளியாகவில்லை.

இதை எதிர்த்து, படத்தை தயாரித்த கே.வி.என்., புரடக்ஷன்ஸ் நிறு வனம், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதின்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

'படம், 500 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலத்துக்குள் படத்தை வெளியிடாவிட்டால் எங்களுக்கு இழப்பு ஏற்படும். எனவே, தணிக்கை சான்றிதழ் வழங்க உத்தரவிட வேண்டும்' என, தயாரிப்பு நிறுவனம் வாதிட்டது. 'குறிப்பிட்ட காலத்திற்குள் சான்றிதழ் வழங்க வேண்டும் என்று எங்கள் தரப்பை நிர்ப்பந்திக்க முடியாது' என, வாரியத்தின் வழக்கறிஞர் வாதிட்டார்.

மறு தணிக்கைக்கு ஒப்புக் கொண்ட, கே.வி.என்., நிறுவனம், வழக்கை திரும்ப பெற்றது. அதை தொடர்ந்து, ஜனநாயகன் படத்தின் மறு தணிக்கை, நேற்று முன்தினம் மும்பையில் நடந்தது. அப்போது தணிக்கை வாரிய உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்த காட்சிகள் நீக்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து, வாரியம் திருப்தி தெரிவித்ததாக கூறப்படுகிறது.

ஜனநாயகன் படத்தின் நாயகன் விஜய், தற்போது அரசியல் கட்சி தலைவராக உள்ளார். எனவே, தேர்தல் நடத்தை விதிகளின்படி, அவர் நடித்துள்ள படம், தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்துமா என்பதை ஆய்வு செய்து, படம் வெளியீட்டிற்கு அனுமதி வழங்குவது குறித்து தேர்தல் கமிஷன் முடிவெடுக்கும் என தகவல் வெளியாகி உள்ளது.

ஜனநாயகன் படத்தை வைத்து, தேர்தல் கூட்டணிக்கு வரும்படி, விஜயை பா.ஜ., கட்டாயப்படுத்துவதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின. தற்போது தணிக்கை வாரியம் தன் பணியை முடித்துள்ளது. இந்நிலையில், தேர்தல் ஜனநாயகம் குறித்து மட்டுமல்ல; ஜனநாயகன் திரைப்படம் குறித்தும், தேர்தல் கமிஷன் முடிவெடுக்க உள்ளது.






# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## தமிழ்நாடு கூடுதல் தலைமை தேர்தல் ஆணையருக்கு பெட்ரோலிய டீலர்கள் கூட்டமைப்பு கோரிக்கை!

சென்னை, மார்ச். 19–

வரும் ஏப்ரல் 23–ம் தேதி தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. அதற்காக தற்போது தமிழ்நாட்டில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன. உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.50 ஆயிரத்திற்கு மேல் ஒருவர் பணம் கொண்டு சென்றால், அதை பறக்கும் படையினர் பறிமுதல் செய்கின்றனர். மாநிலம் முழுவதும் IOCL, BPCL, HPCL நிறுவனங்களின் கீழ் இயங்கும் 7,100–க்கும் மேற்பட்ட பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்நாடு பெட்ரோலிய டீலர்கள் சங்கம் (TNPDA) சார்பாக, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல் ஆணையத்திற்கு எங்களின் முழு ஒத்துழைப்பையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



பெட்ரோலியப் பொருட்கள் அத்தியாவசியப் பொருட்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளதால், பொதுமக்களுக்கும் அவசரகால சேவைகளுக்கும் தடையற்ற விநியோகத்தைப் பராமரிப்பது இன்றியமையாதது. இது தொடர்பாக, பின்வரும் செயல்பாட்டுக் கட்டுப்பாடுகளை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

எங்களின் தினசரி பரிவர்த்தனைகளில் சுமார் 75% ரொக்கப் பரிவர்த்தனைகளே ஆகும். ஒவ்வொரு விற்பனை நிலையத்திலிருந்தும் பெறப்படும் தொகை 22 லட்சம் முதல் 30 லட்சம் வரை இருக்கும். எண்ணெய் நிறுவனங்களுக்கு சரியான நேரத்தில் RTGS பணம் செலுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும், "வறட்சி" நிலைகளைத் தடுப்பதற்கும், இந்த ரொக்கப் பணத்தை தினசரி வங்கிகளில் டெபாசிட் செய்ய வேண்டும் அல்லது இரவு நேரங்களில் பாதுகாப்பிற்காக டீலரின் இல்லத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

பறக்கும் படைகள் (FS) அல்லது நிலையான கண்காணிப்புக் குழுக்கள் (SST) மேற்கொள்ளும் ஆய்வுகளின் போது எந்தவிதமான குழப்பங்களையும் தவிர்ப்பதற்காக, பின்வரும் தரநிலை சரிபார்ப்பு ஆவணங்களை எடுத்துச் செல்லுமாறு எங்கள் உறுப்பினர்களுக்கு நாங்கள் அறிவுறுத்தியுள்ளோம்.

வங்கியிடமிருந்து கடிதம் அல்லது பணப் பரிமாற்றச் சீட்டு. விற்பனையக ஒப்பந்தத்தின் 1ம் பக்கம். குறிப்பிட்ட நபர் பணத்தைக் கொண்டு செல்ல அங்கீகாரம் அளித்து, விற்பனையாளரிடமிருந்து பெறப்பட்ட கையொப்பமிடப்பட்ட கடிதம். அங்கீகரிக்கப்பட்ட நபரின் ஆதார் அட்டை நகல் தினசரி விற்பனைப் பதிவு, தினசரி விற்பனைச் சுருக்கத்தின்" நகல். ஆகியவை கொண்டு செல்லப்படுகிறது. பெட்ரோலியப் பொருட்கள், OTP, டிஜிட்டல் சாவிகள் மூலம் கட்டுப்படுத்தப்படும் E–பூட்டு அமைப்புகள் பொருத்தப்பட்ட டேங்க் லாரிகளில் கொண்டு செல்லப்படுகின்றன. விநியோக இடத்திற்கும் சில்லறை விற்பனை நிலையத்திற்கும் பெட்ரோல் கிடங்கிற்கும் இடையில் கொண்டு செல்லப்ப டும்போது இந்தப் பூட்டுகளைத் திறக்க முடியாது. சரக்குகளை இறக்கிய பிறகு, கொண்டு செல்லும் வழியில் எந்தவொரு முறைகேட்டையும் தடுப்பதற்காக, பெட்ரோலிய அமைச்சகத்தின் வழிகாட்டுதல்கள் மற்றும் எண்ணெய் நிறுவனத்தின் ஆணைகளுக்கு இணங்க, சரக்குப் பெட்டிகள் மீண்டும் பூட்ட ப்படுகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் முன்னிலையில், சில்லறை விற்பனை நிலைய த்திலோ அல்லது கிடங்கிலோ பூட்டைத் திறக்கலாம். அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் (DEO–க்கள்) மற்றும் அமலாக்கக் குழுக்களுக்குப் பின்வருமாறு ஒரு சுற்றறிக்கை, அறிவுறுத்தலை வெளியி டுமாறு தங்களின் அலுவலகத்தைப் பணிவு டன் கேட்டுக்கொள்கிறோம். மேற்கூறிய ஆவணங்களைச் சரிபார்த்து, முறையான வணிகப் பணத்தைப் பறிமுதல் செய்யாமல் கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டும்.

விலைப்பட்டியல் மற்றும் பணியாளர்களின் சான்றுகளைச் சரிபார்த்த பிறகு, மின்னணுப் பூட்டு (E–locked) இடப்பட்ட பெட்ரோலிய டேங்கர் லாரிகள் தடையின்றிச் செல்ல வழி வகை செய்ய வேண்டும். எங்கள் உறுப்பினர்கள் இந்த நெறிமுறைகளைப் பின்பற்றி, அனைத்துப் பாதுகாப்புச் சோதனைகளுக்கும் முழுமையாக ஒத்துழைப்பார்கள் என்று நாங்கள் உங்களுக்கு உறுதியளிக்கிறோம் என்று தெரிவித்துள்ளனர்.

## 'ஜனநாயகன்' பட ரிலீஸ் முதல்.. தேர்தலில் போட்டியிடுவது வரை.. விஜய்க்கு தொடரும் சிக்கல்கள்..!!

சென்னை, மார்ச். 19–

சினிமாத் துறையில் உச்சத்தில் இருக்கும்போதே அரசியலுக்குள் நுழைந்தவர், நடிகர் விஜய். அவரது நடிப்பில் கடைசி படமான 'ஜனநாயகன்', பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கடந்த ஜனவரி மாதம் 9–ந் தேதி திரைக்கு வருவதாக இருந்தது. ஆனால், 'சென்சார்' பிரச்சினையால் படம் இன்று வரை வெளியாகவில்லை. தொடர்ந்து சிக்கல்களை சந்தித்து வருகிறது.

இடையே, கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் இறந்த துயரச் சம்பவம் தொடர்பாக, நடிகர் விஜய்யிடம் நடத்தப்பட்டு வரும் சி.பி.ஐ. விசாரணையாலும் அவர் மன உளைச்சலுக்கு ஆளானார். மேலும், அவரது மனைவி சங்கீதா தொடர்ந்த விவாகரத்து வழக்கு, அவரை மேலும் மன உளைச்சலுக்கு ஆளாக்கியது.




### 2 தொகுதிகளில் விஜய் போட்டி?

இந்த நிலையில், நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில், தமிழக வெற்றிக் கழகம் தனித்து போட்டியிடும் என்று விஜய் அறிவித்துள்ளார். ஏற்கனவே, 60 தொகுதிகளுக்கு வேட்பா ளர்கள் தேர்வு செய்யப்பட்டுவிட்ட நிலையில், மீதமுள்ள 174 தொகுதிகளுக்கும் வேட்பாளர்கள் தேர்வு செய்யும் பணி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல்–அமைச்சர் வேட்பாளராக விஜய் அறிவிக்கப்பட்டுள்ளதால், இந்த தேர்தலில் அவருடைய வெற்றி முக்கியம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் அவர் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதை நிரூபிக்கும் வகையில், பெரம்பூர் தொகுதியில் த.வெ.க. தேர்தல் பணிமனை ஏ.சி. வசதியுடன் அமைக்கப்பட்டும் வருகிறது.

### சொத்து விவரங்கள் தாக்கல்

இந்த நிலையில், தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் 23–ந் தேதி நடைபெற உள்ளதை முன்னிட்டு, அதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 30–ந் தேதி தொடங்க இருக்கிறது. தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும், வேட்புமனு தாக்கலின்போது தங்களுடைய அசையும் மற்றும் அசையா சொத்து விவரங்களையும், தனது மனைவியின் பெயரில் உள்ள அசையும் மற்றும் அசையா சொத்து விவரங்களையும் தாக்கல் செய்ய வேண்டும். அந்த வகையில், நடிகர் விஜய்யும் தனது மற்றும் தன்னுடைய மனைவியின் சொத்து விவரங்களை தாக்கல் செய்ய வேண்டும். தற்போது, சங்கீதா விவாகரத்து கோரி மனுத்தாக்கல் செய்திருந்தாலும், விவாகரத்து பெறும்வரை விஜய்யின் மனைவியாகவே அவர் கருதப்படுவார். இந்த வழக்கு விசா ரணையும் ஏப்ரல் 20–ந் தேதிதான், அதாவது தேர்தலுக்கு 3 நாட்களுக்கு முன்புதான் வருகிறது.

### தேர்தலில் போட்டியிடுவதிலும் சிக்கல்

எனவே, வேட்புமனு தாக்கலின்போது நடிகர் விஜய், மனைவி சங்கீதாவின் சொத்து மதிப்பையும் காட்டியாக வேண்டும். அவ்வாறு இவர் காட்டும் சொத்து மதிப்புக்கு சங்கீதா எதுவும் ஆட்சேபனை தெரிவித்தால், வேட்புமனுவை ஏற்பதிலும் சிக்கல் ஏற்படும்.

அந்த வகையில், நடிகர் விஜய் தேர்தலில் போட்டியிடுவதிலும் சிக்கல் நீடித்து வருகிறது. மற்றொரு புறம், விஜய்யை எதிர்த்து வலுவான வேட்பாளரை களம் இறக்கவும் தி.மு.க. திட்டமிட்டு வருகிறது.

### பி.கே.சேகர்பாபு போட்டி?

பெரம்பூர் தொகுதியில் விஜய் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படும் பட்சத்தில், அவரை எதிர்த்து அமைச்சர் பி.கே.சேகர்பாபுவை களம் இறக்கலாமா? என்று தி.மு.க. தலைமை யோசித்து வருகிறது. இல்லை என்றால், நடிகர் சத்யராஜின் மகள் திவ்யா, தி.மு.க. இளைஞரணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், கூட்டணி கட்சிகளில் ஒன்றான சமத்துவ மக்கள் கழக தலைவர் எர்ணாவூர் நாராயணன் ஆகியோரில் ஒருவரை களம் இறக்கவும் தி.மு.க. திட்டமிட்டுள்ளது.

### சோதனை மேல் சோதனை

இப்படி, 'ஜனநாயகன்' பட ரிலீஸ் விவகாரம் முதல் சி.பி.ஐ. விசாரணை, மனைவி சங்கீதா விவாகரத்து வழக்கு, இப்போது தேர்தலில் போட்டியிடுவதில் சிக்கல் என நடிகர் விஜய்யை பிரச்சினைகள் 'சோதனை மேல் சோதனை' என்ற வகையில், தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

## திமுகவில் இணைந்தார் தவெக மகளிர் அணி நிர்வாகி நடிகை ரஞ்சனா நாச்சியார்!



சென்னை,. மார்ச். 19–

தவெகவின் மகளிர் அணி நிர்வாகியாக இருந்து வந்த நடிகை ரஞ்சனா நாச்சியார் அக்கட்சியில் இருந்து விலகி முதல்வர் ஸ்டாலின் முன்னிலை யில் திமுகவில் இணைந்தார்.

## தொகுதி பங்கீடு இறுதி செய்யப்படுமா? – எடப்பாடி பழனிசாமி திடீர் டெல்லி பயணம்!



சென்னை, மார்ச். 19–

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி திடீரென டெல்லி செல்கிறார். இதற்காக காலை 10 மணியளவில் அவர் டெல்லிக்கு புறப்பட்டார். இதையடுத்து பியூஷ் கோயலின் சென்னை பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளது. டெல்லியில் தொகுதி பங்கீடு தொடர்பாக அமித்ஷாவுடன் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்த உள்ளதாக தகவல் வெளி யாகி உள்ளது. இதனால் அதிமுக – பாஜக தொகுதி பங்கீடு விரைவில் இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 5 தலைநகரங்கள், பெண்களுக்கு தனித்தொகுதி... நா.த.க. தேர்தல் அறிக்கையை வெளியிட்ட சீமான்!




சென்னை, மார்ச். 19–

தமிழக சட்டசபை தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன்னரே தனித்தே போட்டி, வேட்பாளர்கள் அறிமுகம் என தேர்தல் பணிகளில் நாம் தமிழர் கட்சியினர் பம்பரமாக பணியாற்றி வருகின்றனர். இதனை தொடர்ந்து தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் இன்று வெளியிடுவார் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது.

அந்த வகையில், 49 தலைப்புகளில் 462 பக்க தேர்தல் அறிக்கையை சீமான் இன்று வெளியிட்டார். அதில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:–


* சென்னை, திருச்சி, கோவை, குமரி, மதுரை ஆகிய 5 தலைநகரங்கள் உருவாக்கப்படும்.
* 3 சட்டமன்ற தொகுதிக்கு 1 பாராளுமன்ற தொகுதி என வலியுறுத்தப்படும்.
* குடியரசு தலைவரை மக்களே தேர்ந்தெடுக்க வலியுறுத்துவோம். குடியரசு தலைவரை மக்களே தேர்ந்தெடுக்க வேண்டும், மக்களால் தேர்வு செய்யப்படாத எவரும் மக்களை ஆட்சி செய்ய அதிகாரமில்லை.
* மாநிலங்களவை உறுப்பினராகி அமைச்சராகும் முறையை மாற்ற சட்ட திருத்தம் கொண்டு வர நாம் தமிழர் கட்சி போராடும்.
* சென்னையில் உச்சநீதிமன்ற கிளை அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.
* நீதிமன்ற படிவங்கள் அனைத்தும் தமிழில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.
* மாநில நீதிமன்றத்தில் அந்த மாநிலத்தவர் தலைமை நீதிபதியாக சட்டம்.
* வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு வாக்குரிமை பெற்று தர ஏற்பாடு.
* இட படங்கீட்டில் தமிழர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
* மாநிலங்களுக்கு ஜிஎஸ்டி வரியில் 75 சதவீதம் கிடைக்க போராட்டம்.
* தூய தமிழ் மொழியில் மருத்துவ கல்வி கற்க ஏற்பாடு.
* பட்டியல் இனத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தனித்தொகுதியை போல் பெண்களுக்கு தனித்தொகுதி கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
* நாம் தமிழர் கட்சி ஆட்சிக்கு வந்தால் வாக்களிப்பது கட்டாயமாக்கப்படும்.
* மின்னணு வாக்குப்பதிவு முறையை நீக்கிவிட்டு வாக்குச்சீட்டு முறை நடைமுறைப்படுத்தப்படும்.
* நன்கொடை ரசீது போல் வாக்குச்சீட்டு அச்சடிக்கப்பட்டு வாக்கு செலுத்தியவருக்கு அதற்கான ரசீது வழங்கப்படும்.
* மாநிலத்தில் தன்னாட்சி, மத்தியில் கூட்டாட்சி என தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டசபை தேர்தல்: 'பூத் சிலிப்'புக்கு பதிலாக வாக்காளர் தகவல் சீட்டு – தேர்தல் கமிஷன் ஏற்பாடு!

சென்னை, மார்ச். 19–

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

சட்டமன்ற பொதுத்தேர்தலில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களும், வாக்குச்சாவடியில் தங்கள் அடையாளத்தை காட்டும் வகையில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும். வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாதவர்கள், ஆதார் அட்டை உள்பட 12 வகையான மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் எதாவது ஒன்றை காண்பிக்க வேண்டும்.



வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் வரிசை எண்ணை அறிந்து கொள்வதற்காக புகைப்பட வாக்காளர் சீட்டுக்கு (பூத் சிலிப் பதிலாக வாக்காளர் தகவல் சீட்டை அச்சிட்டு வழங்க தேர்தல் கமிஷன் முடிவு செய்துள்ளது. வாக்குச்சாவடியின் பெயர், வாக்குப்பதிவு நாள், நேரம் போன்றவை அதில் இடம் பெற்றிருக்கும்.

வாக்குப்பதிவு நாளுக்கு 5 நாட்களுக்கு முன்பு அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் தகவல் சீட்டு மாவட்ட தேர்தல் அதிகாரியால் வினியோகிக்கப்படும். என்றாலும், வாக்குச்சாவடியில் வாக்காளர் தகவல் சீட்டு, அடையாளத்தை காட்டுவதற்கான ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படாது. ஒரு வாக்காளர், வேறொரு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருப்பாரேயானால், அந்த அடையாள அட்டையையும் தேர் தல் கமிஷன் சுட்டிக்காட்டும் ஆவணமாக பயன்படுத்தலாம்.

ஆனால் அந்த வாக்காளருடைய பெயர், அவர் ஓட்டுபோட சென்றிருக்கும் வாக்குச் சாவடிக்குரிய வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும். வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை அல்லது 12 அடையாள அட்டையில் எந்தவொரு அடையாள ஆவணத்தையும் வைத்திருப்பதால் மட்டுமே ஒரு வாக்காளர் தனது வாக்கை செலுத்தி விட முடியாது. அவருடைய பெயர் அவர் ஓட்டுபோட உள்ள வாக்குச்சாவடிக்கான வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே அவர் வாக்குரிமையை செலுத்த தகுதியுடையவர் ஆவார்.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் பிரிவு 20ஏ–ன் கீழ் பதிவு பெற்றுள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள், ஓட்டு போட அணுகும் வாக்குச்சாவடியில், அவர்களின் அசல் கடவுச்சீட்டிலுள்ள விவரங்களை அடிப்படையாக கொண்டு (வேறெந்த அடையாள ஆவணமும் அல்லாது) அவர்களின் அடையாளம் மெய்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நெருங்கும் சட்டசபை தேர்தல்.. அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீது வழக்குப்பதிவு செய்யக்கோரி தி.மு.க. எம்.பி. மனு!

சென்னை, மார்ச். 19–

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி. வேலுமணி, தங்கமணி, சி. விஜயபாஸ்கர், எம்.ஆர். விஜயபாஸ்கர், சி.காமராஜ், கே.சி.வீரமணி, கே.பி. அன்பழகன், தி.நகர் முன்னாள் எம்.எல்.ஏ. சத்யா மற்றும் முன்னாள் முதல் – அமைச்சர் எடப்பாடி பழனிசாமி உறவினர் சேலம் இளங்கோவன் ஆகியோருக்கு எதிராக சென்னை ஐகோர்ட்டில், தி.மு.க. ராஜ்யசபா எம்.பி. கிரிரா ஜன் தனித்தனியாக வழக்குகளை தாக்கல் செய்துள்ளார்.



அந்த வழக்கு மனுக்களில், "முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி அமைச்சராக இருந்தபோது, மாநகராட்சி பகுதியில் சாலைகள் அமைப்பதில் முறைகேடுகள் நடைபெற்றதாக வழக்கு, வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக வழக்கு, எல்.இ.டி. விளக்குகள் வாங்கியதில் முறைகேடு நடைபெற்றதாக வழக்கு என பல வழக்குகள் லஞ்ச ஒழிப்பு போலீசாரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேபோல் முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சர்களாக இருந்த தங்கமணி, கே.பி.அன்பழகன், எம்.ஆர். விஜயபாஸ்கர், காமராஜ், சி.விஜயபாஸ்கர், கே.சி. வீரமணி, முன்னாள் எம்.எல்.ஏ.சத்யா, சேலம் இளங்கோவன் உள்ளிட்டோர் மீது வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக தொடரப்பட்ட வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளன.

இவர்கள் மீதான வழக்குகளின் அடிப்படையில், சட்டவிரோத பணபரிமாற்றத் தடைச் சட்டத்தின் கீழ் இவர்கள் மீது மத்திய அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்ய முகாந்திரம் உள்ளன. இதுகுறித்து, மத்திய அமலாக்கத்துறைக்கு பல்வேறு புகார்கள் அனுப்பியும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, இவர்கள் மீது அமலாக்கத்துறை சட்டவிரோத பணபரிமாற்ற தடை சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்ய உத்தரவிட வேண்டும்" என்று கூறியுள்ளார்.

இந்த வழக்குகள் ஐகோர்ட்டில் விரைவில் விசாரணைக்கு வரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வாட்ஸ்அப் குழுக்களுக்கு கிடுக்குப்பிடி; அட்மின்கள் தான் முழு பொறுப்பு: தேர்தல் ஆணையம் எச்சரிக்கை!

சென்னை, மார்ச். 19–

தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் 23–ம் தேதி நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதையடுத்து தேர்தல் நடத்தை விதிகள் கடந்த 15–ம் தேதி மாலை முதல் அமலுக்கு வந்துள்ளன. தற்போது தேர்தல் பிரச்சாரங்களில் சமூக ஊடகங்களின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கிறது. இதில் வாட்ஸ்அப் முன்னணியில் இருக்கிறது. ஒவ்வொரு சட்டப்பேரவை தொகுதியிலும் ஆயிரக்கணக்கான வாட்ஸ்அப் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.




வாட்ஸ்அப் குழுக்கள் மூலம் பரப்பப்படும் தகவல்கள், செய்திகள் எளிதாகவும், அதிக எண்ணிக்கையிலும் மக்களை சென்றடையும் என்ற நிலை இருப்பதால், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தங்கள் பிரச்சாரங்களுக்கு வாட்ஸ்அப் குழுக்களை பயன்படுத்த தொடங்கியுள்ளனர். இதையடுத்து வாட்ஸ்அப் குழுக்களை கண்காணிக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இதற்காக மாவட்டம்தோறும் சிறப்பு குழு அமைக்க ப்பட்டுள்து. அந்த குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் அனைத்து வாட்ஸ் அப் குழுக்களின் அட்மின் களுக்கும் ஒரு எச்சரிக்கை தகவல் அனுப்பியுள்ளனர். அதில் வாட்ஸ்அப் குழுக்களில் நடைபெறும் தேர்தல் விதிமுறை மீறல்களுக்கு குழுக்களின் அட்மின்களே பொறுப்பு. எனவே வாட்ஸ்அப் குழுக்களில் விதிமுறை மீறல் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

விதிமுறை மீறல் நடந்தால் வாட்ஸ்அப் அட்மின்கள் மீது தான் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து பல வாட்ஸ்அப் குழுக்கள் அட்மின் ஒன்லி என்ற நிலைக்கு மாறியுள்ளன. மேலும் அந்த குழுக்களில் தேர்தல் ஆணையத்தின் எச்சரிக்கை தொடர்பாக அட்மின்கள் தங்கள் குழு உறுப்பினர்களுக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020